மெய்கண்டார் கழக வெளியீடு. கஉ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க.



சைவ சந்தானாசாரியர் புராணம்

சிவஞான சுவாமிகள் சரிதம்.

காஞ்சிபுரம்

மெய்கண்டார் கழகம்.

1940.

மெய்கண்டார் கழக வெளியீடு—கஉ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க

திருவாரூர்ச் சுவாமிநாத தேசிகரவர்கள் இயற்றிய

சைவ சந்தானசாரியர் புராணமும்

திரிசிரபுரம்-மகாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளையவர்களியற்றிய

சிவஞான சுவாமிகள் சரிதமும்

இவை

காஞ்சிபுரம்

ஆடிசன்பேட்டை சவுளி வியாபாரம் சாமியார்

உயர்திரு.

வி. பி. ஏ. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள்

பொருளுதவியால்,

மெய்கண்டார் கழகத்தினர்

பத்மா அச்சகத்தில் பதிப்பித்தவை

மெய்கண்டான் யாண்டு எகஎ

1940

உ

சிவமயம்

பதிப்புரை

சைவசித்தாந்த சந்தான குரவர்களின் வரலாற்றைப் புராண வடிவமாகக் கூறும், திருவாரூர், சுவாமிநாத தேசிகரவர்களியற்றிய சைவசந்தானசாரியர் புராண சங்கிரகத்தை இதற்கு முன் பதிப்பித்து வெளியிட்டவர்கள் திருவாரூர், பொன்னையா தேசிகர் அவர்கள் ஆவார்கள். அப்பதிப்பின்படிகள் இப்போது கிடைத்தல் அரிதாக இருத்தலின் இவ்வெளியீட்டை நம் கழகம் மேற்கொள்வதாயிற்று. இவ்வெளியீட்டில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களியற்றிய சைவசித்தாந்தமாபாடிய கர்த்தா மாதவச் சிவஞான யோகிகள் வரலாறும், சந்தானகுரவர், பாடியகாரர் தோத்திரங்களும் உடன் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுடன் சந்தான குரவர்கள் அருளிய அருணூல்களின் விளக்கமும் தரப்பட்டுள்ளது.

இவ்வெளியீட்டிற்கு வேண்டிய பொருளுதவியைச்செய்து முற்றுவித்தவர்கள் காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை சவுளி வியாபாரம் சாமியார் உயர்சைவத்திருவாளர் வி. பி. ஏ. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் ஆவார்கள். சாமியார் அவர்களின் தூய வாழ்க்கையும் ஒழுக்க விழுப்பமும், அவர்களாலியற்றப்பெற்றுவரும் அறவினைத்திறன்களும் யாவரும் அறிந்தவை. சமய வளர்ச்சிக்குக் கருவியாகிய இத்தகைய கடவுட் பேறறத்தைச் செய்ய முந்துதல் அவர்களுக்கு இயல்பேயாகும். இக்கடனறி காட்சிப் பெருந்தகையார்க்கு நமது கழகம் மனமார்ந்த நன்றி செலுத்துகிறது.

இப்பதிப்பைச் செம்மையாக அச்சிட்டு முடித்த பத்மா அச்சக உரிமையாளருக்கு நம் கழகத்தின் நன்றியுரியதாகின்றது.

இவ்வெளியீட்டை இடையூறின்றி இனிது முற்றுவித்த எல்லாம்வல்ல இறைவன் திருவருளை இறைஞ்சுகிறோம். இதனை அன்பர்கள் யாவரும் பெற்றுப் பயன் துய்ப்பார்களாக.

இங்ஙனம்,

காஞ்சிபுரம்,
30-10-40.

க. வச்சிரவேல் முதலியார்,
கு. மு. அண்ணாமலை ரெட்டியார்,
செயலாளர்கள்.

உ

சிவமயம்.

சைவசந்தானாசிரியர்களும் அவர்களியற்றிய அருணூல்களும்.

1. மெய்கண்டதேவர்:—

சிவஞான போதம்
(வார்த்திகப் பொழிப்புடன்)

2. அருணந்திசிவாசாரியர்:—

1. சிவஞான சித்தியார்
2. இருபா இருபஃது

3. மறைஞானசம்பந்தர்:— ———

4. உமாபதிசிவாசாரியர்:—

1. சிவப்பிரகாசம்
2. திருவருட்பயன்
3. வினாவெண்பா
4. போற்றிப் பஃறொடை
5. உண்மைநெறிவிளக்கம்
6. கொடிக்கவி
7. நெஞ்சுவிடுதூது.
8. சங்கற்பநிராகரணம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மேய்கண்ட நாதன் விரைகழல் வேல்க.

சைவசந்தாநுசாரியர் புராணம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகர்.

பொன்னார் இதழி சடைக்கணிந்த
புனிதப் பெருமான் பூங்கழலே
முன்னு விரும்பும் எப்பொருளும்
என்று முன்னி முறைபரவு
மின்னார் கயிலைச் சந்தான
குரவர் சரிதம் விளம்பிடுவான்
என்னே ரோடை ஐங்கரத்தன்
இருதாட் கமலம் இறைஞ்சிடுவாம். (க)

நடராசர்.

துடியதனிற் படைத்தன்மிகு தூய்மையொடு
மமைகரத்திற் காத்த றெல்லைப்
படிபுகழு மங்கியினி லழித்தலுற
வூன்றுமலர்ப் பாதந் தன்னின்
மடியுறவே மறைத்தனற்குஞ் சிதசரண
மலரின்க ணருள லாகத்
திடமுறுத்திச் சிற்சபையிற் றிருநடஞ்செய்
துறைதேவைத் தியானஞ் செய்வாம். (உ)

சைவசமயாசாரியர்.

தம்மானைச் சுட்டியருந் தந்தையர்க்குப்
புலப்படுத்தார் சரணம் போற்றி
அம்மானை மறைக்கதவந் திறப்பித்துத்
தரிசித்தா ரடிகள் போற்றி
எம்மானைப் பரவையிடைச் சந்துசெல
வேவினர்தம் மிருதாள் போற்றி
பெம்மானைப் பரிவயவ ராக்கினர்தம்
பிரசமலர்ப் பாதம் போற்றி. (௩)

சைவசந்தாஞசாரியர்.

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டா ரிணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த
அருணந்தி நற்றுள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றுள் போற்றி
சீராண்ட தில்லைநக ருமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி. (௪)

புராணவரலாறு.

சம்புவிற் றெளிந்த நந்தி யருள்பெறு சனற்கு மாரன்
நம்புகல் வியாதற் கோத நவையறு மவன்சூ தற்குப்
பம்பிட நவில்பு ராணம் பதினெட்டுட் பவுடி யத்தில்
எம்பெரு மக்கள் காதை யினையன திகழு மன்றே. (௫)

நூற்பயன்

எவ்வுலகுந் தொழுமெழிலார் சந்தான
குரவர்கட மியற்பு ராண
திவ்வியநன் மான்மியத்தைத் தீவிரமா
மன்பினெடு செவியிற் கேட்போர்

இவ்வுலக விந்திரா யினிமையுறு
செல்வமெலா மெய்திப் பின்னர்
நவ்விவிழி யுமைபாக னருளாலே
பரமுத்தி நண்ணி வாழ்வார். (சு)

அவையடக்கம்.

இவ்வுலகிற் புலவரெலா மிலக்கியமு
மிலக்கணமு மிசைய வாய்ந்து
திவ்வியநற் பிரபந்தம் பலவிழைப்பார்
திடமொன்று மில்லாத் தீயேன்
செவ்வியபன் மயிலாடல் கண்டிடுவான்
கோழியுறு சிறைவி ரித்தே
எவ்வமுற ஆடுதல்போ லெழிற்குமரவர்
மான்மியத்தை இயம்ப லுற்றேன். (எ)

பாயிரம் முற்றும்.

ஆகச்செய்யுள் — எ.

மெய்கண்ட சிவாசாரியர் புராணம்.

அம்பொன் மேருவிற் கரத்தினி லேந்திநல் லருள்செய்
நம்பன் மேவிய குலஞ்செறி நன்னடு நாட்டின்
உம்ப ராரும்வந் தொழிவுரு தாடுறு நிவாவின்
கம்ப மாமணி திரையெறி கரைவட பாங்கர். (க)

கடந்தை மாநக ரமர்ந்தகா ராளர்தங் குலத்திற்
படர்ந்த நாமவச் சுதர்களப் பாளர்தம் பக்கல்
இடம்பெ றும்பல செல்வமு மெய்திமேம் பட்டே
அடங்கி டாதபே ரறிவுறு மதலையை யடைவான். (உ)

தங்குருச்சக லாகம பண்டிதர் தாளில்
அங்க மெட்டுறப் பணிந்தரு மகவினை யளிக்குந்
துங்க நல்வர மருளெனத் தொல்லை நா லுணர்ந்தோன்
புங்க மார்தமிழ் மறையினைப் போற்றினான் சாத்தி. (௩)

வே று.

தூயமறைக் குலமேவு தமிழ்விரகர் துதிசெய்த
*பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவெ லாம்பெறுவ ரென்னவமை யருட்பதிகஞ்
சேயதமிழ் மறையதனிற் றெளிவுறக்கண் டுளமகிழ்ந்தே. (௪)

வே று.

தன்ன டித்தலம் பணிவுறுந் தன்மைசால் கடந்தை
மன்னு பேறி வுறுநன்மா ணாக்கனை நோக்கிப்
பொன்னி மாநதி வடகரைப் பொலியும்வெண் காட்டிற்
பன்னு நல்வர மளித்திடு முக்குளம் படிந்து. (௫)

பிரம வித்தியா நாயகி தன்னையும் பிறைசேர்
அருண வேணியா ரானையு மடிபணிந் தேத்திக்
கருணை யன்பர்தம் பூசனை கவினுற விழைத்துச்
சரண மென்மலர் தலைக்கணி யாமெனத் தாழ்ந்து. (௬)

ஏனை நல்லற மில்லொடு மியற்றியே வதியிற்
பான லங்கணாள் பங்கன தருளினாற் பரம
ஞான நல்லுருப் புதல்வனை நயமுறப் பெறுவை
ஈன மற்றிடு மிம்மொழிக் கையமின் றென்றார். (௭)

என்று கூறிய தங்குலக் குரவன திணைத்தா
ளொன்று மன்பொடு பணிந்துகை யுச்சிமேற் கூப்பி
யன்று தம்மனைக் கிழத்தியோ டகங்களி துளும்பிச்
சென்று செய்குவ லென்றுநல் விடைகொடு செல்வார். (௮)

*திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் திருவெண்காட்டுத்திருப்பதிகம் - பண் - சீகாமரம் ௨ பேயடையா.

திடம்பெ றுங்கலை முழுதுணர் தேசிக ருரைத்த
நடந்த ருஞ்சிவன் சுவேதமா வனத்திடை நண்ணி
இடம்பெ றும்பல தருமமு மியற்றியே வதிந்தார்
அடங்க லில்லருஞ் செல்வவச் சுதர்களப் பாளர். (கூ)

வதிய லூற்றவோ ராண்டினின் மருவுமோர் வைகல்
மதிய மாருநற் சடையினான் கனவில்வந் தெம்பாற்
பதியு மன்பகே ளிம்மையிற் பாலனைப் பயக்கும்
விதிநி னக்கிலை யென்றருள் செய்தனன் விமலன். (ய)

அன்ன வாசகங் கேட்டவச் சுதர்களப் பாளர்
பொன்னங் கொன்றையம் மதியொடு மௌலியிற்புனைந்தோய்
மன்னு பூம்புக லிப்பெரு மான்மன மகிழ்ந்து
சொன்ன லங்களும் பொருள்களுஞ் சுரந்தருள் பொழிய (கக)

உம்மை யேத்துநற் றமிழ்மறைப் பாடலை உன்னி
மெய்ம்மை யாகவே நம்பினேன் விதியிது கண்டாய்
அம்மை காணநல் லருணடம் புரியுமா ரமுதே
இம்மை யிற்கதி யருளுநற் புதல்வனை ஈவாய். (கஉ)

வேறு.

என்றுபல முறையிறைஞ்சித் துதித்து நிற்க
இமயமலைக் கொடிபாக னியம்ப லுற்றான்
நன்றுனது துதிகேட்டு மகிழ்ந்தோ முன்னம்
ஞானபோ னகனம்மைத் துதித்த பாடல்
ஒன்றுறுதி கொளுநின்பா லுலக மேத்த
உயர்காழிக் கவுணியன்போ லொருவன் வந்து
நன்றருளு மகவுருவாய் நண்ணு மென்ன
நவிற்றியருள் செய்தனனன் மகிழ்ச்சி பொங்க (கங)

வேறு.

இம்மொழிகேட் டுக்கடந்தை யச்சுதர்க
 ளப்பான ரின்ப மேவிச்
செம்மையுறு மறமனைத்து முன்போல
 இனிமையொடு செய்யுங் காலைக்
கொம்மைவரிக் குயமனையா டிருவயிற்றிற்
 சிறுகருப்பங் குலவித் தோன்ற
மெய்ம்மறையிற் சடங்கனைந்து மையிரண்டு
 திங்களினும் விரும்பிச்செய்தார். (கச)

இந்தமுறை கிரியையெலா மீரைந்து
 திங்களினு மியற்று நாளிற்
சந்தமறை யாகமங்கள் வழியொழுகு
 தாபதர்கள் சலிப்பற் றேங்க
மந்தபரி பாகருநல் லத்துவித
 மெய்யுணர்ந்து மகிழ்ச்சி பெய்த
எந்தையருள் சிவஞான போதமறை
 இயற்றமிழி னினிது மேவ. (கரு)

நல்வியாத முனியுரைசெய் சூத்திரத்தின்
 பாடியமோர் நான்குங் கொண்ட
சொல்வாய்மை பொருள்வாய்மை தெளிதலுறத்
 தோராது சோக முற்றோர்
எல்லாரு மத்துவித சுத்தநிலை
 யினிதெய்திச் சோக மேவப்
பொல்லாத சமயிகளு மதிசயிப்பப்
 புவனிமிசைப் போத மேற (கசு)

நலமலியுஞ் சிவனடியார் எஞ்ஞான்று
 மானந்தம் நண்ணி யோங்கத்

தலமலியு மெங்நாட்டுந் தென்னாடு
தலையெனவே சகங்கொண் டாடக்
கலைமலியும் பிள்ளையா ரொருவர்தாம்
தந்தைமனக் கவலை தீர
நிலவலயத் தவதரித்தார் நிறையன்பர்
சுற்றத்தார் மகிழ்ச்சி நீட. (கஎ)

அந்நாளிற் றந்தையா ரகமகிழ்ச்சி
மிகவெய்தி அந்த ணர்க்குப்
பொன்னாதி பல்வகைய தானங்கள்
பூமிசையிற் பொலிய நல்கி
மின்னாரும் புத்திரற்கு மரபுளிமுன்
செய்சடங்கு விதியிற் செய்து
பின்னாளிற் சாதகநல் வினைமுற்றிப்
பேரின்பம் பெருகி வாழ்நாள். (கஅ)

வே று.

வெள்ளை மாவனத் தடிகள்பால் விடைபெற்று மீண்டு
பிள்ளை யோடுநன் மனைவியுஞ் சுற்றமும் பிறரும்
உள்ள மாருநன் மகிழ்ச்சியி னொருவுதங் கடந்தை
எள்ள ருங்கதிர் மாளிகை இடத்துமே வினரால் (கக)

அண்ண லாகுமச் சுதர்களப் பாளர்தா மரிய
வண்ண நன்மக வோடுவந் தணைந்தநற் செய்தி
கண்ண கன்பொழிற் கடந்தையார் களிப்புறக் கேட்டு
நண்ணு மன்பொடு நாடொறும் வந்துபார்த் துவப்பார் (உ௰)

பிள்ளை மாமதி போன்றுநற் பிள்ளையார் வளர
வெள்ள வேணியா ரன்பராம் விமலரைக் கொண்டு
வள்ள லார்க்குநன் நாமமிட் டழைத்திட வரத்த
தெள்ளு மாகம விதிமுறை செய்துநற் சடங்கு. (உக)

ஒருசு வேதவ னப்பெரு மாளென வொண்பேர்
உரிமை யாவிடக் கடந்தையா ருவப்புற வருநாள்
இருமை சேர்திரு வெண்ணெய்நல் லூரினி லுறையும்
அருநன் மாமனார் தம்மனை யெடுத்துவந் தணைந்தார். (உஉ)

அணைந்த காதல ரும்மையி லான்றனற் சரியை
மணந்த வாதநற் கிரியைநல் யோகமே மன்னி
இணங்கு சாமுசித் திகநிலை யாண்டிரன் டினராய்ப்
புணர்ந்தி ருக்குநா ளங்ஙனம் நிகழ்ந்தது புகல்வாம். (உங)

வெள்ளி வெற்பமர் விமலனு ருள்பெறு நந்தி
வள்ள லாரடி மலர்புனை சனற்குமா ரன்பால்
தெள்ளு சத்திய ஞானதற் றரிசனி திருத்தாள்
உள்ளு முள்ளமா ரொருபரஞ் சோதிமா முனிவர் (உச)

அன்ன குன்றொரீஇத் தென்மல யாசல மணுக
மின்னு பேரொளி விமானமீ தேகுறும் வேலைப்
பொன்னி நேடுமுத் தெறிதிரைப் பெண்ணைநீர் புடைசூழ்
சென்னி மாமதிச் சிவனுறை வெண்ணெய்நற் பதிக்கு. (உரு)

நேர தாகவவ் விமானநின் றிடுதலு நிறைந்த
தீர வாலறி வுடைப்பரஞ் சோதியார் தேர்ந்து
வார மோடிழீஇச் சுவேதவ னப்பெரு மாட்குச்
சேர மெய்யுணர் வெய்திய திறந்திரு வருளால். (உசு)

தேர்ந்து தீக்கையு மெய்கண்ட நாமமுஞ் செறித்துச்
சார்ந்த மந்தண மாஞ்சிவ ஞானபோ தத்தை
ஈந்து தங்குரு வறிவுறுத் தியபொழிப் பிசைத்தே
ஆர்ந்த செந்தமி ழாக்கென பொதிவரை யடைந்தான் (உஎ)

அருட்டு றைக்கணே யமர்பொலாப் பிள்ளையா ரருளால்
மருட்டி லாமலே சிந்தித்துத் தெளிந்துபின் மாட்சிப்

பொருட்ட தாஞ்சிவ ஞானபோ தத்தைத்தென் மொழியி
லருட்டி றத்திறற் பெயர்த்துவார்த் திசுப்பொழிப் பறைந்.
இன்ன காலையிற் பலர்பரி பாகர்க ளீண்ட [தார்.(உவ)
அன்னர் சென்னிமேற் றிருவடி வைத்தருள் செய்தே
மன்னு மச்சிவ ஞானபோ தத்தினை வகுத்துப்
பின்னர் முன்னெடு மாறுசோ லின்றியே பெருக்கி. (உகூ)

வே று

உரைத்தருளி வாழ்நாளிற் சின்னாட் பின்னர்
உயர்வுடைய தங்குலத்துக் குரவ ரான
திருத்துறையூ ராகமபண் டிதர்தாந் தம்மைத்
தெரிசிக்கா திருக்கின்றான் றிருவெண் காடன்
பொருத்தமுற நாமங்குச் சென்று காண்டும்
பூம்பொழில்வெண் ணெய்ப்பதியிற் பொலிய [வென்றே
வரச்சிலரை முன்விடுத்தா ரவர்கள் கூறும்
வாய்மைகேட் டகமகிழ்ந்தார் வெண்ணெய் [வாழ்வார்.(௩௰)

வாழ்வுற்று நகரெங்குங் காவ ணங்கள்
வானழுதோ ரணங்கமுகு வகைகள் நாட்டித்
தாழ்வற்ற சூதமலி கும்ப மாதி
தனைமுதலா மங்கலங்கள் எவையுந் தங்கித்
எழுற்ற மாடங்கள் புதுக்கி யாரும்
இயலுறவே எதிர்கொண்டு வணங்கி எங்கள்
ஊழுற்ற வினைமுருக்கி யோதி நல்கும்
உத்தமசற் குருநாத உய்ந்தோ முய்ந்தோம்.(௩௧)

என்றுபல முறைபழிச்சி வெண்ணெய் நல்லூர்
இலகுநல் வேளாளர் யாருஞ் சூழ
நன்றுதவு மக்குரவர் விருதி னோடு
நல்லசிவா கமசகடம் நண்ணச் சென்றே

ஒன்றுறுமங் கலவெண்ணெய் நல்லூர் மேவி
உயர்வீதி வலம்வந்தங் கும்பர் போற்ற
அன்றுகடல் நஞ்சுண்ட அண்ணல் பொற்றாள்
அன்பினொடு மிறைஞ்சியருள் பெற்று மீண்டார்.
[(கூஉ)

மீண்டுதிரு மடத்தெய்து குரவர் பாதம்
விருப்பினொடும் பணிந்தேத்தி விருந்த ளித்தார்
நீண்டதிரு முண்டநுத லானர் பாதம்
நினைந்துய்யு மெய்கண்டார் நினைவிற் சற்றும்
காண்டகைய குருவரவை எதிர்நோக் காது
கழல்பணியா திருக்குமதைக் கருதி நோக்கி
ஆண்டகைய வக்குரவ ரவர்பா லேகி
அண்மையராய் நின்றலவ அப்போ தங்கண் கூகூ

ஆணவமென் மொழியதனை நால்முன் னாக
அங்கமரு மாணவகர் அறைதல் கேளாக்
காணுறுநன் மெய்கண்டார் தம்மை நோக்கிக்
கருதுமா கமகுரவர் கனலு நெஞ்சார்
ஏணமரா ணவசொருவம் என்னை என்ன
இயலுறுநற் செவிகேட்டே இனிமை யோடும்
மாணுறுதந் தர்ச்சனியங் குலியி னாலே
மற்றவரை நேர்சுட்டி மதிக்க வைத்தார். (கூச)

மெய்கண்டார் இவ்வாறு சுட்ட லோடும்
வியமுறு சிந்தையராய் மெய்ம்மை தேர்ந்தே
கைகண்ட சிவஞானந் திகழச் சென்று
கருதுமா கமகுரவர் கண்ணுற் றங்குப்

பொய்கண்ட சமயநெறிப் புரைநீக் கந்தப்
புண்ணியர்தங் கழல்பணியப் புகழ்ந்த ளாவி
நெய்கொண்ட குழலுமையாள் பங்கன் பாதம்
நிலவியபே ரன்புடையார் நினைந்து செய்வார். ௫௫

வேறு

ஆதி சைவநல் லருணந்தி யேயென அழைத்துப்
பூதி ஈந்துதங் குருவருள் புரிந்திட்ட படியே
தீது தீர்சிவ ஞானபோ தப்பொருள் தெளிய
ஓது செந்தமிழ்ச் சூத்திரங் களைமுனம் உரைத்து. (௫௬)

வார்த்தி கப்பொழிப் புரையினர் வகுத்தருள் செய்து
கூர்த்த அன்பொடு முதன்மைமா ணாக்கராக் கொண்டு
பார்த்த லத்ததி பக்குவ ரெனப்பலர் புகழத்
தீர்த்த னைந்தெழுத் தோடுமா வாக்கியஞ் செப்பி. (௫௭)

வேறு

மெய்யுணர்ந்தார் புகழுமரு ணந்தி யோடு
மேவதிகை மனவாச கங்க டந்தார்
பொய்யகல்சிற் றம்பலநா டிகண்முன் னாகப்
புகழுறுமா ணாக்கர்நாற்பத் தொன்ப தின்மர்
மையகலும் பரிபாக நன்கு ணர்ந்து
மன்னுசிவ தீக்கைமுறை மருவச் செய்து
தெய்வவருண் மேவிடமுப் பொருளு ணர்த்திச்
சின்மயராந் தன்மையினைச் செய்து பின்னர் ௫அ

வேறு

சுத்த மானவத் துவிதநற் சோகம்பா வனையே
நித்த முந்தினைந் திருத்தலால் நிருமல சீவன்
முத்த ராகிப்பே ரானந்த மூர்த்தியாய் முடிவில்
சித்த சித்தெலா நிறைந்திடு சிவபர ஞானர். (௫௯)

மன்னு ளார்கடம் மாசுநீர்ந் தரனருண் மன்ன
எண்ணி லாகம சாரங்க ளினிதெடுத் தியம்பும்
அண்ண லாகிய மெய்கண்டா ரடியிணை வழுத்தி
விண்ணு ளார்பணி அருணந்தியார்திறம் விரிப்பாம். ௬௰

மெய்கண்ட சிவாசாரியார் புராணம் முற்றும்.
ஆகச்செய்யுள் ௬௭.

அருணந்தி சிவாசாரியர் புராணம்.

வேத வொலியு முழவொலியும் வேள்வியியற்றுந் திருமறை யோர்
நாத வொலியு மோவாத நன்மை பெருகுந் திருத்துறையூர்
ஆதி சைவ குலம்புரிந்த அருமை யான பெருந்தவத்தால்
நீதி சாலுஞ் சிவாகமங்கள் நிலவ வொருவ ரவதரித்தார் (௧)

செல்வ மலியுந் தந்தையர்தஞ் சீராட் டோடு வளர்நாளில்
மல்ல லாதி சைவர்கடம் மரபிற் கேற்ற முறைமையினால்
தொல்லை வேத வாகமங்கள் சொல்லு நல்ல விதிமுறைபின்
வல்ல பல்ல பெரியோராற் சாத கன்மம் வகுத்துப்பின். (௨)

சேய்மை யான பதிவதியுஞ் சிவவே தியருஞ் சூழ்ந்துறைய
நாம காணஞ் செய்துவந்து நலமார் சேச வினைமுற்றி
ஓம மாற்றி அன்னம்நுகர் கிரியை முடித்தே யொளிர் பருவந்
தூய்மை யோடு மேறப்பின் துகடீர் சுற்றஞ் சூழலுற. (௩)

எல்லை யில்லாச் சிறப்போடும் இனிய வேதா கமமுறையிற்
புல்லும் பூணூற் கடிமுடித்துப் புரையில் காயத் திரியதனை
நல்ல வோரை தனிலுரைத்து நவைதீர் காண்டோ பக்கிரமந்
தொல்லை முறையிற் செய்வித்தார் துகடீர் சைவ மறையோர்கள்

அந்நாட் டொடங்கிப் பொதுநூலாம் அரிய மறையின் கன்மவகை
பொன்னார் பத்தி காண்டவகை போத மாருங் காண்டவகை
பன்னா ளோதி அங்கவகை பயின்று சிறப்பு நூலாகும்
மின்னார் சைவா கமங்களெலாம் விதியா லங்குப் பயிலுறுவார். (ரு)

வேறு

காமி காதியா மாகமங் கவினுறச் சொல்லு
நாம நற்சரி யைப்பொரு ளையமுறு கிரியை
தூய்மை யெட்டுறுப் பாச்சொலும் யோகபா தத்தின்
வாய்மை நற்பொருண் ஞானபா தப்பொருள் வகையும் (சு)

ஏனை நற்கலை யாவையு மினியசெந் தமிழும்
ஈன மற்றிடப் பயின்றதா லியாவரு முவந்து
ஞான நற்சக லாகம பண்டிதர் நாமம்
மான முற்றிட வைத்தனர் மண்ணகம் புகழ. (எ)

வேறு

புன்மை நீங்காப் புறச்சமய நெறிகள் போக்கிப் புரைதீர்ந்த
நன்மை பெருகுஞ் சைவநெறி நாட்டி நான்கு வருணத்திற்
றொன்மை யாக வருமடியார் தொல்லை வினையின் றுகள்முழுதும்
இன்மை யாகச் சிவாகமங்கள் இயம்பு தீக்கை முறைபுரிந்து.

வளரு நாளிற் றிருவெண்ணெய் மெய்கண் டருளும்வள்ளன்முன்
கிளரு ஞானங் கடையுண்டு கீழ்மை யகற்று மவர்பாதம்
மிளிரு மன்பிற் பணிந்தேத்தி மெய்ம்மைச் சிவஞா னமும்பெற்றே
தளர்வு நீங்கி மறைஞான சம்பந் தர்க்குத் தக்கமுறை. (கூ)

சுத்தாத் துவித நிலையுணர்த்திச் சொல்லற் கரிய சிவஞான
சித்தி யாரும் நல்லிருபா விருபஃ தினையுஞ் செய்தருளிப்
பத்த ராவார் பலர்பணியப் பரசி வோகம் பாவனையால்
நித்த வகண்ட பூரணமா நிலைமை யெய்தி நின்றனரால் (ய)

அந்தன் பெண்ணைக் கரைத்துறையூர்
அமரு மருணந் திப்பெருமான்
பந்த மவிழ்ந்து மணங்கமழும்
பதும பதத்தைத் துதித்திறைஞ்சிக்
கந்த அடவிபுடை சூழுங்
கடந்தை மறையோர் களிதுளும்ப
வந்த நல்ல மறைஞான
முனிவர் சரிதம் வகுத்திடுவாம். (கக)

அருணந்தி சிவாசாரியர் புராணம் முற்றும்.
ஆகச்செய்யுள் ருஅ.

மறைஞான சம்பந்த சிவாசாரியர் புராணம்.

மாவாழ் திருமார் பனுமயனு மகவான் முதல்வா னேரெவரும்
ஓவா தென்றும் பணிந்துவக்கு முயர்வாம் வெள்ளாற் றின்பாங்கர்
தாவா மறைநான் கோதுசிவன் தணவாத் தூங்கா னைமாடப்
பூவார் கோயி லினிதமரும் பெண்ணு கடமாம் புரியதனில்

வேறு

தூயமறைக் குலம்விளங்கச் சொற்கலைகள் தெளிவெய்த
மேயசிவ னடியார்கள் மேல்வினையின் துகளகற்ற
மாயவயற் சமயங்கண் மறையவர்தங் குலத்தொருவர்
தியனவெ லாமாழத் திருவவதா ரஞ்செய்தார்.

தந்தையார் சுற்றத்தார் தாய்மார்க ளொடுத்தேந்திச்
சிந்தைகளிப் புறவேத விதிவழியே செய்சடங்கு
சந்தமறை யொலிமுழங்கச் சாதகா திகள்செய்து
வந்தமுறை எழாண்டின் மறைமுந்நூல் மணமுடித்தார்.

வந்தமர பினுக்கேற்ப வளர்மறையு மாகமும்
முந்தைமநு முதலறநூன் மூலவறுதொல் புராணங்கள்
சந்தமுறப் பயின்றுறு சாத்திரமும் வந்தபினர்
எந்தைபிரான் மறைஞான சம்பந்தர் எனப்பெற்றார். (ச)

அந்நிலையிற் றிகழ்வார்தாம் அருணந்தி யாரையடைந்
தென்னுடைய பந்தமறுத் திணையடி சூட் டிடுமென்னச்
சொன்னமுறை சிவதீக்கை சோகமறச் செய்வித்தே
பன்னரிய சிவஞானம் உணர்த்துநூல் பலவுரைத்தார். (ரு)

வேறு

அன்ன தேசிகர் அடியிணை தொழுதவண் நீங்கிச்
சென்னி யாறுடை யார்சிதம் பரதலஞ் சேர்ந்து
மன்னு சிற்சபா நாதரை வலங்கொடு பணிந்து
பன்னு மைந்தெழுத் தோதுறாஉம் பணியடைந் தனர்பின்

உத்த மப்பரி பாகராம் உமாபதி யார்க்குச்
சுத்த தத்துவ ஞானத்தைத் துகளற வருளிச்
சித்தர் சூழ்ந்துவாழ் திருக்களாஞ் சேரியி லமர்ந்து
முத்தி எய்தினர் முழுமுதற் சிவனடி முன்னி. (எ)

வேறு

கண்ணகன் புரிசை மாடக் கடந்தைமா நகரில் வந்த
அண்ணல்சம் பந்தனார்தம் அடியிணை தலைமேற்கொண்டு
விண்ணுளார் பரவுந் தில்லை வேதஅந் தணரின் மிக்க
ஒண்மைசேர் உமாப திப்பே ருத்தமர் திறமு ரைப்பாம் (அ)

மறைஞான சம்பந்த சிவாசாரியர் புராணம் முற்றும்.

ஆகச்செய்யுள் கூகூ.

உமாபதி சிவாசாரியர் புராணம்.

பொன்னிவளந் தருசோழ நன்னாட்டிற்
புகழ்மலியும் புலியூர் தன்னின்
மன்னுமறைக் குலமகிழ மாமுனிவர்
போற்றிசைப்ப வனிதை பாகன்
சொன்னசிவா கமம்விளங்கத் திருவுடையந்
தணர்மரபி லொருவர் தோன்றிப்
பன்னரிய அபிதானம் உமாபதியார்
எனவெவரும் பரவப் பெற்றார். (க)

அப்பெற்றி யுடையபிரா னருமறையா
கமமுதலா மனைத்துந் தேர்ந்தே
எப்பற்று மறவெறிவா ரெழில்வளர்பொன்
னம்பலவ ரிருதாள் பற்றி
கைப்பற்று மலர்கொண்டு காலமுறப்
பூசித்துக் கருதி வாழ்நாள்
ஒப்பற்ற மறைஞான சம்பந்தர்
பாலுற்ற உண்மை சொல்வாம். (உ)

வேறு

மூவா யிரநாட் டொருநாளின்
மூல முதல்வன் பூசைபுரிந்
தோவா விருதோ டுயர்சிவிகை
யாரோ கணரா யுண்ணின்றுந்
தாவா வடியார் புடைசூழத்
தகுநல் வீதி வருவாரை
நாவார் மறைஞா னப்பெருமான்
கண்ணுஞ் சிவிகை யுறநோக்கி. (ந)

வேறு

பட்ட கட்டையிற் பகற்குரு டேகுதல் பாரீர்
சிட்டர் சூழ்தர என்றசொல் செவியுறக் கேட்டே
அட்ட மூர்த்திதா ளகமல ரன்புமா பதியார்
மட்டி லாதபே ரன்பராய் மகிழ்வுகொண் டனராய். (ச)

வார்த்தை கேட்டவக் கணத்தினே வாகனத் திழிந்து
தீர்த்த ராகிய சம்பந்தர் திருவடி தொழுது
பார்த்த அக்கணம் பகற்குரு டென்றருள் செய்தீர்
சீர்த்தி எய்தினீர் நாயினேற் கப்பொருள் செப்பி. (ரு)

பூர்த்தி ஞானநல் வரம்பினைப் புகலுவீ ரென்ன
நார்த்த தும்பிய குரவரும் அதன்பொருள் நவிலப்
போர்த்த தம்வரு ணபிமா னம்புறக் கணித்துக்
கூர்த்த அன்பொடு மாங்கவர் குறிவழி நின்றார். (சா)

வேறு

இங்ஙிலை நிற்கு நாளி லெழில்வளர் மறையோர் வாழும்
மன்னுதண் கடந்தை வந்த மறைஞான முனிவர் தாமும்
தன்னிகர் பணியி யற்றிச் சாருமா பதியார் தங்கண்
இன்னருள் சுரந்து நோக்கி எய்துநற் பாகம் பார்ப்பான் (எ)

பாரகம் புகழும் நல்ல பண்புடைத் தொழிலென் றுன்னிக்
*காருக வினைமேற் கொண்ட †கரிசிலார் வீதி சென்று
சீரகம் புகுநாற் பாவிற் செலுத்திய கூழின் சேடம்
வாருமவ் விடைத்தாஞ் சென்று கரத்தினில் வாங்கி உண்டார்

---

* காருகவினை-நெய்தற்றொழில். † கரிசிலார்-செங்குந்தர்.

உன்றுறு காலை அந்தக் காத்தினி லொழுகுங் கூழை
அன்னலார் உமாப திப்பே ரங்கண ரேந்தி யுண்ணத்
தன்னருள் சுரந்தே யாங்குத் தனிச்சிவ ஞான போதம்
புன்னியர் திருவாக் காலே பொலிவுற உரைத்தா ரன்றே (கூ)

உரைத்தலு மேனை நாலு மொழிவுறு தோதுங் காதல்
வரப்பினும் வணங்கிக் கேட்ப மறைஞான முனிவர் தாமும்
திரத்தநற் பத்தி சான்ற திருவுடை யங்க ணார்க்குக்
காத்தலா கமல மென்னச் சிவாகமப் பொருள்கள் காண (க0)

ஏனைய ஞான நூல்கள் யாவையு முரைத்துத் தம்மெய்ஞ்
ஞானசற் குருவு ரைத்த நல்லுப தேசஞ் செய்து
தேனினே டினிமை முற்றுஞ் சிவஞான அமிழ்த முண்ட
வானவ ரெனக்க ளிக்க மகிழ்வருள் செய்தா ரன்றே. (கக)

இம்முறை வாழ்வார் தம்மை எழிலரு ணிருக்தர் தாளை
மெய்ம்முறை பூசை செய்யும் வேதிய ரறியா ராகித்
தம்முறை பிறழ்ந்தா ரிந்தத் தனிஉமா பதியா ரென்ன
எம்மா பிழந்தி ரென்றே எள்ளினு ரெவருங் காண. (கஉ)

மற்றது காலை தன்னின் மநுகுல வேந்தாற் பெற்ற
கொற்றவன் குடிபி லேகிக் கோதிலா மடங்கண் டாங்கே
பெற்றிசா லடியர் சூழப் போருட் சிவனைப் பூசை
சொற்றநூல் விதியா லாற்றித் துயக்கறு தியானஞ் செய்வார்.

வேறு

இந்தமுறை ஞானநிட்டை புரியு நாளில்
எழில்வளரு நடராசர்க் கியற்றும் பூசை
அந்தமுறை நாள்வாவுந் தில்லை வாழும்
அந்தணர்கள் மேவுதிரு வம்ப லத்தே

பந்தமகல் உமாபதியார் பரிவு கூர்ந்து
 பரமனடி பூசிப்பான் பணிந்து செல்லச்
சிந்தைவே ருகியநல் லந்த ணாளர்
 செல்லன்மின் போமெனவே செப்பி விட்டார்.

இக்கொடிய மொழிகேட்ட முனிவர் தாமன்
 றெய்துமனத் தளர்வோடு மேகி அந்தத்
தக்கதனி மடமெய்திச் சம்பு பூசை
 தனைவாமே மானதத்திற் றயங்கச் செய்ய
மிக்கவெறுப் பொடுதடுத்த மறையோர் தாமும்
 வேதநா யகர்பூசை விரும்பிச் செய்வான்
புக்குமணிப் பொன்மன்றின் கதவம் நீக்கிப்
 புண்ணிய அம் பலவாணர் திருமுன் போந்தார்.

அழகியசிற் றம்பலவன் பேட கத்தை [(கரு)
 ஆங்குற்று நோக்கினர் காணா ரஞ்சி
மழவிடையான் திருமுன்னர்ப் பணிந்து மாழ்கி
 மாயமிதென் மன்றின்வளர் மணியே மாலும்
அழகுறுதா மரையயனு மாதி யந்தம்
 அறிவரிய அழற்பிழம்பாம் அண்ணல் அண்ணல்
பழகியஎம் அபராதம் பற்ருய் எங்ஙன்
 பழவடியார்க் கருள்புரிவான் பரிந்து சென்ருய்.

தாட்டுணையே புணையாகப் பற்றி நின்று [(கசா)
 தனிமாயைக் கடல்நீந்துந் தக்கோர் பாலோ
கோட்டமிலா மனத்தோடுங் குளத்தி லுன்னைக்
 குறித்துமதி அமிழ்துண்ணுங் குணத்தர் பாலோ

ஈட்டமரு மலராதி கொண்டன் பாக
எழிலுறுபூ சனைபுரியு மியல்போர் பாலோ
நாட்டமொரு மூன்றுடையா னெங்க ளூற்றாய்
நடமிடுவா னென்றமுது நைவா ராஞர். (கள)

இம்முறை அந்த ணாள ரியாவரு மிரங்கிப் போற்ற
மெய்ம்முறை வேத நாதன் விண்ணிடை விளம்ப லுற்றான்
தம்முறை பூசை யாற்றுந் தகுதிசா லுமாப திப்பேர்
அம்மறை யோனம் மன்ப னவனிடை யமர்ந்தோ மென்றான்.

விளம்புமா காய வாணி வேதியர் யாரும் கேட்டுத்
தளர்ந்தநெஞ் சுடைய ராகித் தாயிடைப் புகுமான் கன்றிற்
கிளர்ந்தெழு மன்பி னேடும் கேடிலா ஞானச் செல்வ
வளந்தரு முமாப திப்பேர் மறையவர் பால்வந் துற்றார். (கஅ)

உற்றடி பணிந்தி யாரு மோதிசால் முனியே எங்கள்
குற்றநற் குணமாக் கொண்டு குறைவுதீர்த் தருளு மாறு
பற்றிலார்க் கருளுந் தில்லைப் பரனடிப் பூசை யாற்ற
இற்றைக்கே வருதல் வேண்டு மெம்பிராற் குரியா யென்றார்.

இன்னணந் தில்லை வாழும் அந்தணர் வேண்ட ஏகிப்
பொன்னணி மன்ற வாணர் பூம்பதப் பூசை யாற்றித்
தன்னிக ரந்த ணாளர் தனிமட மேவிப் பின்னர்
மன்னுறு சிவன் முத்தி வாத்தராய் வைகும் நாளில். (உ௧)

முன்னொரு முனிவன் பன்னாள் முதுசிவ புண்ணி யஞ்செய்
தன்னநற் பலத்தி னாலே அகக்கர ணந்தி ருந்தி
உன்னரு ஞான நூல்க ளோதிமா மேதை யாகிப்
பின்னொரு பாவந் தன்னை இழைத்தனன் பேதை போல.

அன்னதோர் கார ணத்தா லவ்னியிற் புலையர் தங்கள்
உன்னருங் குலத்து தித்தா னெய்பில்பேர் பெற்று னென்னப்
பன்னருந் தாதை கூறப் பாலனும் பருவம் நீங்கித்
தன்னருங் குலத்துக் கன்னி தனைமணம் புரிந்தா னன்றே.

இன்னணஞ் சின்னாட் செல்ல எம்பிரா னருளி னாலே
முன்னைநற் பவத்திற் செய்த புண்ணிய முதிர்வா லங்ஙன்
உன்னுதம் மரபி லுற்ற குறையெலா முன்னி உன்னிப்
பின்னரு வருப்புக் கொண்டு சேரியிற் பிரிந்தா னன்றே (உச)

சுற்றமுந் துணையும் நீத்துத் துகளறு போத மேவக்
கற்றைவார் சடையான் வாழுங் கவினுறு தில்லை மேவிப்
போற்றிணி மதில்சூழ்கோயிற் புறத்தினில் வணங்கிச்சின்னாள்
உற்றபின் விறகு வெட்டி ஒவ்வொரு நாளும் கொண்டு (உரு)

மருமலர்ச் சடையான் கோயில் மடப்பள்ளி யூடு செல்லத்
திருவுடை அந்த ணாளர் வாயிலாச் செலுத்துங் காலை
வரிசிலை வரையாக் கொண்ட வள்ளலா ரருள்வந் தெய்தக்
கருமலி பவந்து டைக்குங் காலமு மணிமை யாக. (உசு)

வே று

விரவு மடியார் துயர்தீர
வெள்ளி விடைமேல் வரும்பெருமான்
பரவும் பெற்றான் சாம்பாற்குப்
பரமுத் தியினை நல்கிடுவான்
திரமெய் யடியார்க் கெளியனெத்
தீட்டும் பாவார் திருமுகத்தை
வரமார் கனவில் வந்தருளி
வனிதை பாகர் சிலமொழிவார். (உஎ)

என்பா லன்பா ருமாபதிவா ழெழிலார் கொற்ற வன்குடியில்
அன்பா லேகிப் பணியியற்றி அளித்தி யாலித் திருமுகத்தைத்
துன்பார் மலக்கூ டகல்வித்துத் தூய முத்தி தனைநல்கும்
நின்பா லன்பா யெனவுரைத்து நீத்தார் பொன்னம் பலக்கிழவர்.

கனவு நீங்கிச் சாம்பானர் கருத வரிய திருமுகத்தை
மனவாக் கெட்டாச் சிவனளித்த வண்ணம் நோக்கி மகிழ்ந்துருகிப்
பனவர் தில்லைப் பரனேயோ பதித னேன்பா லருள்செய்யும்
அனகா பொன்னம் பலக்கூத்தா அரசே அமுதே எனத்துதித்தார்.

இந்த முறையாற் றுதித்திறைஞ்சி இனிய சிவனர் திருமுகத்தைப்
பந்தஞ் செய்து பரனுரைத்த வாறே போந்து பலநாட்கள்
கொந்தார் தளவக் கொடிபுடைசூழ் கோமான் கொற்றவன்
குடிவா,ழந்தணாளர் திருடமத்தினருகு விறகுப்பணிசெய்வார்

பன்னாள் விறகுப் பணிசெயுநாள்
மழையா லொருநாட் பணிமுட்ட
அந்நாள் மடத்தி லமுதமைக்கத்
தாழ்த்த தாக அஃதறிந்தே
மின்னார் பொன்னம் பலக்கூத்தர்
விரும்பு மடியார் தாமதமென்
இந்நா ளென்ன மடைத்தொழிலார்
இறைஞ்சி இனைய இயம்புவரால். (ருக)

வே று.

பனவர்தங் குரவீர் கேட்பீர் பஞ்சம னொருவன் பன்னாள்
தனிவிற களித்தா னிற்றை நல்கில னென்று ரைத்தார்
அனையவன் நாளை வந்தால் நம்மிடை அழைமின் என்னப்
புனிதஅந் தணர்கள் கோமான் புகன்றனன் புகலக் கேட்டார்

மற்றைநா ளிரட்டி யான காட்டங்கள் மல்கக் கொண்டே
உன்றனர் சாம்பா ருற்ற எல்லையி னேடித் தாழ்ந்து
சுற்றவர் பணியு மெங்கள் கருணையங் கடலே இந்நாள்
மற்றவன் போந்தா னென்று மகிழ்வுற வோதி னுரே.(ஙங)

மடைவளத் தடியார் கூறும் மகிழ்வுரை கேட்டெ ழுந்து
நடைகொடு திரும டத்தின் முன்றிலை நண்ணி யுற்ற
அடியனை நோக்கி அப்பா ஆரைநீ யாங்க னுற்றாய்
படிதவிர் குணத்தா யெல்லாம் பகர்கியென் றருளிச்செய்தார்

இம்முறை அந்த ணாளர் அருளலு மெழிற்சாம் பானார்
மெய்ம்முறை அரனார் தந்த திருமுகம் வைத்து வீழ்ந்தார்
கொம்மென அடியா ரோடிக் குலவுசீர்த் திருமு கத்தைத்
தம்மிடை தரலும் அந்தத் திருமுகந் தன்னை நோக்கா.(ஙரு)

அரனருள் செய்த அந்தத் திருமுக மதனை அன்பாற்
சிரமிசை யேற்றிக் கூப்பித் திருநய னங்க ளொற்றிக்
கரசர ணாதி யங்கம் கம்பித்து நடனஞ் செய்து
வாதனே நாயே னுய்ந்தே னுய்ந்தன னெனவ ணங்கா(ஙசா)

எழுந்து பேரின்ப மெய்தி ஏகனு ணையை நினைந்து
தொழுந்தகைச் சாம்பார் சுத்த சத்திநி பாதம் நோக்கி
அழுந்துசத் தியநிர் வாண தீக்கையா லளித்தார் முத்தி
செழுந்திரு அந்த ணாளர் தெய்விக குரவ ராவார். (ஙஎ)

இந்தநன் முறைமை கேட்டே எய்திய சாம்பா னார்தஞ்
சந்தமார் மனைவி சுற்றந் தக்கநட் பாளர் கூடிப்
பந்தநான் மறையோ னெங்கள் பதியமர் சாம்பா னாரைச்
செந்தழல் கொளுவச் செய்தான் என்றிறை செவியிற் சொற்றார்.

அந்தநல் வசனம் கேட்டே அரசனு மதிசயித்துச்
சுந்தர மறையோர் தம்பால் வந்தடி தொழுது சொல்வான்
அந்தணரேறே எங்கள் அருந்தவப் பயனே இற்றென்
சிந்தனை அயிர்க்கு மாறு செய்தனர் சில்லோ ரென்றான் (நகூ)

என்றலும் அந்த ணாளர் இயம்பினர் தீக்கை மேன்மை
நன்றுறு மரசன் கேட்டு நாயினேன் அறியு மாற்றால்
இன்றொரு தீக்கை தன்னை இயற்றிட வேண்டு மென்ன
அன்றவர் சூழ்ந்து நிற்கு மடியவர் குழாத்தை நோக்கி. (சய)

சத்திநி பாதம் பெற்ற தகைமையர் தமைக்கா ணாது
நித்தனு மருச்சித் தேத்தும் நிருத்தன்மஞ் சனநீர் தன்னால்
அத்தனி மடத்தின் பாங்கர்க் கோமுகப் புறத்த மர்ந்த
சுத்ததா வரம தான முள்ளியை நோக்கிச் சொல்வார். (சக)

அரசனே கேட்டி இங்ஙன் அடியவர் பலரை ஆய்ந்தும்
வரதபோ தனரா யுள்ள பக்குவம் மருவக் காணோம்
பரசிவ னடியர் நாளும் பரிந்துணக் காய்க ளீந்த
உரைபெறு முள்ளி இத்தை உயர்கதிக் குய்த்தும் காண்டி.

என்றுரை புகன்றே அந்த எழிலுமா பதியார் முள்ளி
தன்றனி உருவம் நோக்கத் தகைபெறு சோதி யாகி
அன்றர சனையுள் ளிட்டோர் அரகர வெனச்சே விப்பச்
சென்றுயர் விசும்பி லேகிச் சிவனுரு வாய தன்றே. (சரு)

இன்னணம் நிகழ்ந்த செய்தி கண்டவவ் வரச னேதம்
மன்னிடா வகைபா னந்த மருவுமா பதியார் பாதம்
பொன்னணி ஆடை மாலை முதலிய கொடுபூ சித்து
நன்னுதின் பெருமை யோரா நாயினேன் பிழைபொ றுத்தி.

என்றப ராத மீந்து விடைகொடு மீண்ட தற்பின்
நன்றுசால் அருண மச்சி வாயர்முன் னயக்குஞ் சித்தர்க்
கொன்றுமுப் பொருளு ணர்த்தி உயர்சிவ ஞான மீந்து
பொன்றுதல் பவித்த லில்லாப் புனிதரா லயத்தினண்ண சசூ

ஆங்கம ரந்த ணாள ரியாவரு மருவ ருத்துத்
தீங்கிலாப் பெரியோர் தம்மைச் செறுத்துடன் கொண்டு சென்றே
ஓங்கெயில் வட்டப் பாங்க ரோவுறத் தள்ளி விட்டுத்
தீங்கிலா அரனுர்க் கேயுந் திருவிழாத் தொடக்கஞ் செய்வார்

மெய்ம்முக மறையோ ரேற்றும் விழாக்கொடி எழாமை காணுப்
பைம்முக அரவப் பூணுன் பதநினைந் திரங்க ஆங்கோர்
மைம்முக விசும்பின் வாணி எழுந்தது மறையோர் கேட்பீர்
நம்முக மன்பு மிக்க நல்லுமா பதிவந் தக்கால். (சஎ)

ஏறிடுந் துவச மென்ன இம்மென யாரு மோடித்
தேறுநும் பெருமை யெண்ணுச் சிறியரேம் பிழைபொ றுத்தே
ஆறணி சடையி னுன்றன் அணிவிழா அமைத்தல் வேண்டும்
ஊறமு தனையீ ரென்றே உவப்பொடும் பணிந்து நின்ருர்.

பணிந்தபி னெழுந்து சென்றே பயிலுமா பதியா ரென்பார்
குணங்குறி யிலாத கூத்தப் பிரானடி குறுகிப் போற்றி
இணக்குநல் லொளிக்கு மென்னு மின்பமார் முதற்பா வோதி
அணங்குசேர் பாகத் தண்ணல் அணிவிழாச் செய்து பின்னர் (சகூ)

கொடிப்பாட்டு நூலருளிக் குலவுசிவப்
பிரகாசங் கொள்வி னுப்பா
ஓடிப்பாட்டு மருட்பயனே டுண்மைநெறி
விளக்கமுளம் உய்க்குந் தூது
படைப்போற்றிப் பஃறொடைப்பா சங்கற்ப
நிராகரணம் பதிகக் கோவை

புடைத்தோற்று பதிக்கோவை சேக்கிழார்பு
ராணமன்பர் புராண சாரம். (௫௦)

அருளியபின் திருக்கோயிற் புராணமதை
ஆக்கியரும் பேட கத்தே
மருவியிடப் புரிகாலை அந்தணர்கள்
அம்பலத்தில் வாராவண்ணம்
பரிவின்றித் தடுத்தனரப் பொதுவாழு
நடப்பெருமான் பரிவு கூர்ந்து
பெருகுதிரு உமாபதியார் மான்மியத்தைப்
புவனிமிசைப் பிறங்கச் செய்ய. (௫௧)

ஒருநாட்சா யங்காலைச் சபரியைசெய்
அந்தணர்க ளுள்புக் கார்க்குப்
பெருநாட கப்பெருமா னு நவமறைத்
தருளுகனும் பெம்மா னேயோ
கருமாற அருளுகவுங் கண்ணுதலே
எனக்கரைந்து கலங்க லுற்றுத்
திருநாதா அம்பலவா வெங்குற்றாய்
என்றென்றே செப்புங் காலை. (௫௨)

சிற்சபையி னடமிடுவா ரருளாலே
விண்ணின்மிசைத் திருவாக் கொன்று
மற்சாமி லுமாபதிபே டகமதனின்
மன்னினம்யாம் வாரத்தி ரென்றே
சற்சன அந் தணர்செவியிற் சார்ந்திடலும்
இரங்குமனத் தாய்பாற் செல்கோ
வற்சமென நற்கொற்ற வன்குடிவாழ்
உமாபதிபால் வந்து சூழ்ந்தார். (௫௩)

எங்கள்குலச் சிகாமணியே ஏழைமையால்
யாங்களிழை குற்ற மெள்ளிப்

பங்கமுறு தெமைக்காத்தி யென்றவர்தஞ்
சரணமிசைப் பணிந்து சொல்வார்
புங்கவர்கள் போற்றிசைக்கும் பொதுவினடம்
புரிபெம்மான் பூசைக் காக
அங்குசெலக் காணுதெம் பெருமானை
யழுங்கினேமனைய காலை (ருச)

உமாபதியார் பேடகத்தில் உறைகின்றோம்
என்னவொரு விண்ணின் வாணி
நமாவென்று தொழுமடியார் எல்லாருஞ்
செவிகேட்க நண்ணிற் றென்ன
எமாலொன்று குறையுமில்லை பேடகத்தில்
எழுதுகோயிற் புராணஞ் செய்து
சுமாவைத்துப் பூசித்தா மென்றருள
அக்கணம்பூ சுரர்கள் சொல்வார். (ருரு)

அடிகேளிப் புராணமதை அம்பலம்வைத்
தரங்கேற்றி அருள்வீ ரென்னப்
படிபோற்றுந் தில்லைநகர்த் திருவுடையந்
தணராவார் பல்லோர் கூடிக்
கொடிதோர ணங்கள்குடை சாமரைசின்
னம்முதல குலவிச் சூழ
மடியாராத் தவமுடையீர் வைகுறுமிச்
சிவிகைமிசை யென்ன வந்தார். (ருசு)

வந்தேறுஞ் சிவிகைதனை மலிதலுறு
மந்தணர்கள் வாங்கித் தோண்மேன்
மந்தார மலர்சொரிய வந்தார
வீதியிடை வணங்கிச் சென்றே
சந்தாரு மம்பலத்திற் றவிசினிடைத்
தகைமைபெறு புராணந் தன்னை
முந்தாக வைத்துமலர் கொடுதூவி
வாசிக்க முதல்வ னார்தம். (ருஎ)

என்றுமிருந் ததுபோலப் பொன்மன்றி
லெழுந்தருளி யிருப்பக் கண்டு
நன்றுறுமந் தணர்மகிழ்வு கொண்டுநவில்
புராணத்தை நயந்து கேட்டுக்
கன்றையுடை ஆனெனவே கசிந்தமனத்
தினராகிக் கதிப்பா ரானர்
மன்றவர்பே ரருளாலே புராணமதை
அரங்கேற்றி வைகிப் பன்னாள். (ருஅ)

வேறு.

சத்திய ஞான னந்தத் தத்துவ அனுப வத்தால்
பத்திசெய் அடியார் போற்றப் பரனடிக் கமல மெய்தி
நித்திய சுபாவ முத்த நிராகார பூர்த்தி யான
சுத்தவத் துவிதா னந்த சொரூபமே யாகி நின்றார். (ருகூ)

வேறு

வாழிதிரு அந்தணர்கள் வாழிசெறி வானோர்
வாழிமலி ஆனிரைகள் வாழிபொழி வானம்
வாழியுல காளரசர் வாழிமனு நீதி
வாழிசிவ நேசர்குழு வாழிசிவ நாமம். (சூO)

உமாபதி சிவாசாரியர் புராணம் முற்றும்.
ஆகச்செய்யுள் கஉசூ
சந்தானசாரியர் புராணம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க.
சிவஞான மாதவன் சேவடி வாழ்க.

சந்தான குரவர் திருநட்சத்திரப்பாடல்.

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள்தன்னில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னி
சுத்தமெய்ப் பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

திருச்சிற்றபலம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க.

திருவாவடுதுறை ஆதீனம்

மாதவச்

சிவஞான சுவாமிகள் சரித்திரம்.

காப்பு

விநாயகக்கடவுள்

சீர்பூத்த தாய்முலைப்பால் பருகுந்துணுங்கால்
 மூன்றுறுப்பாற் சேயாய் உள்ளான்
நார்பூத்த மோத்தல்வரு டுதல்கவர்தல்
 செய்தருந்தி நான்பின் என்ன
ஏர்பூத்த ஒருறுப்பால் அத்தனையுஞ்
 செய்தருந்தி யான்முன் என்றே
பார்பூத்த அருள்கொழிக்கும் யானைமுகப்
 பெருமானைப் பரவி வாழ்வாம். (௧)

அகத்திய முனிவர்

சிறந்தஅகத் தியகமிண்டு நவின்றருளிச்
 செந்தமிழா சிரியன் என்றோர்
உறந்தபுகழ்ப் பெயர்புனைந்த தன்றியுநோக்
 காதிபல உற்ற தீக்கை
அறந்தவறு துளவெனினும் பரிசத்தால்
 மால்சிவமே ஆகச் செய்து
திறந்திற லுடைப்பரமா சாரியனும்
 ஆணை நினைந்து வாழ்வாம். (௨)

சண்டேச நாயனர் அறுபத்துமூவர் சேக்கிழார்.

தந்தைதாள் அடைவதற்குத் தந்தைதாள்
அறஎறிந்தார் தம்பி ராற்கே
சிந்தையா தியமூன்றுஞ் செலுத்தறுபான்
மூவர்இவர் சீர்த்தி யாவும்
நிந்தைதீர் தரமொழிந்த நிகரரிய
சேக்கிழார் நீடு வாழ்வார்
அந்தைதீர் தரக்கருதும் அடியேனுள்
அனவரதம் அகலா ராயே. (௩)

மெய்கண்ட தேவர்

அகத்திருளைப் போக்கலும்பன் னிருகதிரோன்
எனத்தமிழில் அழகு வாய்ப்ப
மகத்துவநூல் மொழிபெயர்த்த துணர்ந்தியாமும்
மொழிபெயர்த்தல் வல்லேம் என்று
மிகத்தழைசத் திபஞான தரிசனிப்பேர்
மொழிபொயர்த்து மெய்கண் டானென்
றிகத்தியலப் பரஞ்சோதி அருளியவா
சிரியனடி இறைஞ்சி வாழ்வாம். (௪)

திருமாளிகைத்தேவர்

கச்சோதங் கதிரோமோ யாங்கொள்வயி
ணவமின்றே கழிவ தாக
அச்சோவிவ் வாரியனெங் ககப்படுவான்
என்றரங்க மகல நீத்துப்
பச்சோலைத் தெங்கடருங் கோமுத்தி
அடைந்தரிய பலசெய் தெல்லாம்
நச்சோத அருள்கோழித்து வளர்திருமா
ளிகைத்தேவை நயந்து வாழ்வாம். (௫)

சிவஞான சுவாமிகள்

சீலநிகழ் மூலவா கமப்பொருளோன்
றென்றாகித் திறம்பு றாது
ஞாலநிகழ் சூலதெய்வ மெனப்பலருங்
கொண்டாட நாங்கள் உய்யச்
சாலநிகழ் சமவாத முதலியபோய்
ஒளித்திடவு தயமாய் வந்த
பாலநிகழ் விழிமறைத்த சிவஞான
யோகிபதம் பணிந்து வாழ்வாம். (௬)

நூல்.

தரவு கோச்சகக் கலிப்பா.

பூமணக்கும் பொழின் மணக்கும், பொழிற்கெழில்கூர் தருமுகமாய்த், தூமணக்கும் ஒருபொருநைத் துறைப்புனல் பாய் வளர்த்துவாய், நாமணக்கும் புகழ்படைத்துநலமணக் கும் புலமணக்கும், தேமணக்குந் தமிழ்மணக்குந் தென் பாண்டித் திருநாட்டில். (௭)

மருந்துநிகர் மொழிமடவார் மைந்தரொடு மாட்டயாப்
பொருந்துவளம் பலசெறியும் பூஞ்சோலை புடையுடைத்தாய்ப்
பருந்துதிசான் றென்றுமொளிர் பாவநா சப்பதிப்பால்
திருந்துபுகழ் விக்கிரம சிங்கபுர மெனும்பதியில். (௮)

பொன்பூத்த பெருஞ்சிகரம் பொதிபவரை நிதியமெனும்
கொன்பூத்த நெடியகுணக் குறியமுனி அருள்புலமை
முன்பூத்த எழுதலை முறைவாய்ந்த முழுத்தவத்து
மின்பூத்த புகழ்ப்பாண்டி வேளாள குலதிலகர். (௯)

அணிதருமம் பலக்கூத்தர் அவர்மனையார் வடமீனும்
பணிதருகற் புடையநலம் பாவுமயி லம்மையார்
துணிதருமற் றிவர்தம்பால் தூயறிவங் குரித்தென்னத்
தினிதருமெய் திருந்தொருவர் திருவருளால் அவதரித்தார்.

முக்களா லிங்கமென மொழிபிள்ளைத் திருநாமப்
நக்களா வுறப்பூண்டு நந்துபிறைக் கொழுந்தனையார்
அக்களா அரனருளால் ஐயாண்டின் மேல்நெடிதின்
பக்களா தாத்தோதும் பள்ளியமர்ந் தருளினர். (கக)

பள்ளிஅமர்ந் தருணாளிற் பாவுபுனற் சோணாட்டு
வள்ளியஆ வடுதுறையில் வாழ்நமச்சி வாயகுரு
ஒள்ளியமென் மலர்க்கழலே உளத்துன்னும் முனிவர்சிலர்
நள்ளியவான் புகழ்மிகுமந் நகர்வீதி வரக்கண்டார். (கஉ)

கண்டுபணிந் தெழுந்தடிகேள் கடையேனி லடைந்தமுது
கொண்டுபினர் எழுந்தருள வேண்டுமெனக் குறைஇரப்ப
மண்டுபிரி யத்தவரும் மழவுருவப் பெருந்தகையார்
தொண்டுபடற் கிரங்கியவர் தூயமொழிக் குடன்பட்டார்.

திருந்துசுவைக் கறியமுதும் திருவமுதுங் கொண்டருளி
*அருந்ததியென் னம்மை யென்றோர் அழகியசெய் யுளும்பாடிப்
பொருந்துமவர் செலப்புறத்தே போயிருந்த தந்தையார்
வருந்துதலில் தம்மனைவாய் வந்துநிகழ்ந் ததைஉணர்ந்தார்

---

* அருந்ததியென் னம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்.

உணர்ந்தவுடன் மைந்தரொடும் உறுவர்பாற் போய்வணங்கிப்
புணர்ந்ததிரு வருட்பெருமைப் புத்திரனார் குறிப்புணர்ந்து
தணந்தனர்சென் றனரீன்ற தந்தையார் அம்மைந்தர்
மணந்தனராய் முனிவரொடு வழிக்கொண்டு நடந்தனரால்

வரையகமுங் கருங்கானம் மருவகமும் வயன்மருதத்
தரையகமும் எம்பெருமான் தானங்கள் பலவணங்கி
விரையமைந்த சோணாட்டு மிளிர்திருவா வடுதுறையில்
உரையமைந்த திருமடத்தின் உட்புகுந்தார் உவமையிலார்.

புக்கவர்பன் னிரண்டகவை பொருந்தியொளிர் அஞ்ஞான்றே
தக்கவராய் முண்டிதராய்ச் சந்நியா சத்திறம்பூண்
டுக்கவர்தந் தலைமாலை ஒருங்கணிவார் திருவருளால்
திக்கவருள் அதிசயிப்பச் செழுங்கலைகள் பலபயின்றார். ௧௭

ஆயபெரும் புகழ்த்திருச்சிற் றம்பலத்தே சிகர்நாள்முன்
மேயபெருங் கருணையுரு வேலப்ப தேசிகர்தாம்
பாயநிரு வாணமெனப் பகர்தீக்கை செயப்பெற்றுத்
தாயனையார் சிவஞான முனிவரெனத் தனியமர்ந்தார். ௧௮

வடகலையில் தென்கலையில் மாறிலா இலக்கியமும்
தொடர்புடைய இலக்கணமும் தோலாத தருக்கமுமற்
றிடனுடைமெய்ப் பொருட்கலையும் எக்கலையுமுழுதுணர்ந்து
திடமுடைய அநுபூதிச் செல்வராய்ச் சிறப்புற்றார். ௧௯

சிறப்புறுதொல் காப்பியச்சூத் திரவிருத்தி முதற்பலவும்
மறப்பில்பெரும் புகழ்க்காஞ்சி மான்மியமும் யமகமுதற்
பெறப்படுமந் தாதிகளும் பிறங்குமிவை முதற்பலவும்
உறப்பயில இனிதியற்றி உயர்பரிபூ ரணமுற்றார். ௨௰

சிவஞான சுவாமிகள் திருநட்சத்திரப்பாடல்

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
உன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னும்
திருவாளன் எங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்.

சிவஞான மாதவன் சேவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசந்தானசாரியர் தோத்திரங்கள்.

க. மெய்கண்ட சிவம்.

சிவஞான சித்தியார்.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழ்ச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம். க

விநாயக புராணம்.

சிறிய ஆடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிவெலாம் அகப்படுத் தவற்றின்
நெறியெ லாம்விளக் கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் திந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம். உ

அருணகிரிப் புராணம்.

வேதத்தின் அரும்பொருளை விமலனருள் நந்திக்குப்
போதித்த சிவஞான போதத்தைக் குருமரபால்
ஓதித்தேர்ந் தருந்தமிழால் எமக்குணர்த்தி எம்மூனம்
சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம். ௩

சேது புராணம்.

அல்லாத பரசமய அலகைத் தேர்விண்
டகலவகல் புனற்பெண்ணை அயல்சூழ்வெண்ணெய்ப்
பொல்லாத இபமுகத்துப் புத்தேள் தன்பால்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்றும் ஒன்றாய்
நிற்குநிலை இதுவெனமெய்ந் நெறிதேர்ந் தியாரும்
வெல்லாத சிவஞான போதம் சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீது கொள்வாம். ௪

திருவாரூர்ப் புராணம்.

மைகண்ட மணிமிடற்றோன் விரித்த முன்னூல்
மரபுணர்ந்து வழிநூலா வகுத்தே உண்மை
கைகண்ட சிவஞான போதம் தந்து
கலைமகளை வாழ்வித்துக் கடவுட் கொள்ளாப்
பொய்கண்ட சமயமுத லாய பொல்லாப்
புன்சமய நிலைகெடுத்த புரைதீர் வெண்ணெய்
மெய்கண்ட குரவர்முதற் குரவர் பொற்றாள்
விரைகமலப் போதுமுடி மீது கொள்வாம். ௫

திருவெண்காட்டுப் புராணம்.

பன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி அடிகளிந்தப் பாரின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமான் இங்கே
வருகஎன விளம்புதலும் மௌனம் நீங்கித்
தன்னிகரில் அவனதருள் பெற்றுச் சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவன்
அடியவருக் கடியவர்தாள் அகத்திற் சேர்ப்பாம் ௬.

திருப்பூவணப் புராணம்.

பொய்கண்ட எவையுமெனப் பொல்லாத
        கணபதிதான் புகன்று பின்னர்
மைகண்டத் தடக்குமரன் வழங்குசிவ
        ஞானநூல் வகுத்துக் காட்டக்
கைகண்ட பின்னருளே கண்ணாகக்
        கண்டபெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்
மெய்கண்ட தேவனடி கைகொண்டு
        கூப்பிமுடி மீது சேர்ப்பாம். எ

திங்களொடு கங்கைபுனை அங்கணனார்
        செப்புதிரு வருளி னோடு
தங்குருவாம் பரஞ்சோதி முனிவனினி
        தறைகுறிப்புந் தகவாக் கொண்டு
துங்கமுறு சிவஞான போதமும்வார்த்
        திகப்பொழிப்புஞ் சூழிப்பு நீர்சூழ்ந்
திங்கமருந் தமிழ்நாடு வீடுபெறப்
        புரிகுரவர் இருதாள் போற்றி. அ

நேரிசை வெண்பா.

மூன்று மலங்கெடுத்து மூலமா மப்பொருளும்
தோன்றஅருளுந்தன்தொண்டர்க்கிங்—கான்றமைந்தோர்
கைகண்ட தன்றே கடன்ஞாலத் தெப்பொருட்கும்
மெய்கண்ட தேவன்விரைத் தாள். கூ

சிவபுண்ணியத் தெளிவு.

நற்றமி ழாற்சிவ ஞான போதநூல்
சொற்றுயிர்க் கியல்பதாஞ் சுகோத யந்தரக்
கற்றவன் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
கொற்றமார் குரைகழல் குழைந்து போற்றுவாம். ய

சைவ சமய நெறி.

சிந்திப்பாம் வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்திமகிழ் வாம். கக

பரமத திமிரபாநு.

வித்தகனை வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனெனும்
உத்தமனை வைப்பாம் உளத்து. கஉ

சங்கற்ப நிராகரணம்.

திருவெண்ணெய் மாநகருள் மெய்கண்ட தேவன்
அருளியவாக் காலரித்தாம் ஆசு. கங

இறைவ னூற்பயன்.

வேதகனை வெண்ணெய்நகர் மெய்கண்ட தேவனெனும்
போதகனைப் போதகம்வைப் போம். கச

சித்தாந்த தெரிசனம்.

மெய்கண்டேன் மேற்பிறவி காணேன் திருவெண்ணெய்
மெய்கண்டான் நூலினை வி. கரு

தாயுமானவர்.

பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ. கசு

ஆகச்செய்யுள் 16

அருணந்திசிவம்.

சிவபுண்ணியத் தெளிவு.

புன்னெறி அகற்றிய போத சூத்திரத்
தின்னெறி விளங்கநூல் இலங்கச் செய்துமேல்
நன்னெறி காட்டரு ணந்தி தேசிகன்
தன்னிரு பங்கய சரணம் போற்றுவாம். ௩

முப்பொருளி னீரியல்பும் ஓரியல்பா
நுவலாது முறைவெவ் வேருய்ச்
செப்புசிவா கமங்களின்றன் பொருளொருமை
பெறவுணர்த்து திறமுன் னூலை
ஒப்பவிரி யாப்பதனுற் சித்தியெனும்
வழிநூலா ஒளிர்பிற் காலத்
திப்புவியோர் தெளிந்துய்ய மொழிந்தஅரு
ணந்திசிவன் இணைத்தாள் போற்றி. ௪

பரமததிமிரபாநு.

ஆர்ந்து நினைவாம் அருணந்தி தேவனடி
சார்ந்தார் அடியிணையுந் தாழ்ந்து. ௫

தாயுமானவர்.

பாதிவிருத் தத்தாலிப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ ௬

ஆகச்செய்யுள் உ௰

மறைஞான சம்பந்த சிவம்.

சிவப்பிரகாசம்

பார்புகழ வளர்சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட
சைவசிகா மணிமருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடைசூழ் மதில்மீதே மதியம்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்கிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம். க

திருவளருஞ் சாமமறை திகழ்பரா சரன்மரபோன்
விரசுகர்பான் மறைபுணர்வு விரிந்தொளிரப் புணர்த்துவோன்
மருதமொடு கடந்தையயாள் மறைஞான சம்பந்த
குருமணிதன் மருமலர்த்தாள் குறித்துநிதம் பரசிடுவாம். உ

தாயுமானவர்

சிற்றம் பலமன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள் எந்நாளோ.

ஆகச்செய்யுள் 23

உமாபதி சிவம்

சிவபுண்ணியத்தெளிவு.

சொற்றரு முதல்வழித் தொன்மை நூன்முறை
கற்றெளிர் சிவப்பிர காச நூல்புகல்
கோற்றவன் குடிவரு குரவன் எம்மையாள்
நற்றவன் பதமகம் நாட்டு வாமரோ. ௩

அடியார்க் கெளிய னெனத்தில்லை
அண்ண லருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி யப்பொழுதே
உடலுங் கரைவுற் றடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருணைக்கால்
கடிதிற் புரிகோற் றங்குடியார்
கமலமலரின் கழல் போற்றி.

தாயுமானவர்

குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தென்னாளோ.

ஆகச்செய்யுள் 26

மாதவச்
சிவஞான சுவாமிகள் தோத்திரங்கள்.

சிதம்பரம் சபாநாதர் புராணம்.

குறியமுனி அருளியமெய் வரத்தினால்
அவதரித்துக் கோதில் ஞானத்
துறைசைநமச் சிவாயகுரு அருட்கடலும்
வடமொழிதென் மொழிப்பேர்த் தூய
நிறைகடலும் உண்டுபுனி தாத்துவித
சித்தாந்தம் நிலவப் பூமேல்
மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்சேந்
தமிழ்வகுத்த யோகி வாழி. க

திருமாணிக்குழிப் புராணம்.

வடிவெழுத்தும் பெயரெழுத்துந் தன்மையெழுத்
துந்தெரித்து வழக்கிற் காட்டி
முடிவெழுத்தி னுக்கவே றிலயத்தாற்
பொருட்பகுதி முற்றுங் காட்டி
உடலெழுத்துஞ் சார்பெழுத்தும் உயிரெழுத்தும்
அயன்முதலோர் எழுத்திற் காட்டி
மடமையறுத் தருள்துறைசைச் சிவஞான
சாமியிரு மலர்த்தாள்போற்றி. உ

கருணைபொழி திருமுகத்திற் றிருநீற்று நுதலுங்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு துறவோடு பொறையுளத்திற் பொறுத்தே
பிஞ்ஞகனர் மலர்த்தாள்கள் பிரியாத மனமும்
மருவினர்க ளகலாத ஞானமே வடிவாம்
வளர்துறைசைச் சிவஞான மாமுனிவன் மலர்த்தாள்
ஒருபொழுதும் நீங்காமல் எமதுளத்திற் சிரத்தில்
ஓதிடுநா வினிலென்று முன்னிவைத்தே உரைப்பாம்.

ஓதரிய வாய்மைச் சிவாகமங் கட்கெலாம்
உற்றபே ராக ரமதாய்
ஓங்குதிரு வாவடு துறைப்பதியி லற்புதத்
தொருவடிவு கொண்ட ருளியே
பேதமுறு சமயவா திகளுள மயக்கைப்
பெயர்க்கும்ரச குளிகை யாகிப்
பிரியமுட னேவந் தடுத்தவர்க் கின்பப்
பெருங்கருணை மேரு வாகி

ஆதரித் தடியேங்க ளுண்ணத் தெவிட்டாத
அமிர்தசா கரமா கியே
அழகுபொலி கலைசைச் சிதம்பரே சுரரடிக்
கதிமதுர கவிதை மாரி
மாதவர் வழுத்தப் பொழிந்தருளி யென்றுமவர்
மன்னிவளர் சந்நி தியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்கு வாமே. ௨

தொட்டிகலைச் சுப்பிரமணிய சுவாமிகள்.

கலைதேர் நமச்சி வாயகுரு
கருணைக் கடலிற் றிளைத்தாடிக்
கலகப் பாசத் தொடரறுத்துக்
காமத் தறியை அறவீழ்த்தி
அலையுஞ் சமயத் தருக்கனைக்கீழ்
அடிவே ரோடும் அகழ்ந்தெறிந்திட்டு
அருளின் படாத்தை முகமேற்கொண்டு
ஆதி வேதா கமங்களெனும்
தொலையா மணிகள் இருமருங்குந்
தொனிக்கச் சைவ மதம்பொழிந்து
துங்க மோடும் உலகமுற்றுஞ்
சுற்றும் வெற்றி வாரணமே
மலையா தருளும் முனிவர்சிகா
மணியே வருக வருகவே
வளமார் துறைசைச் சிவஞான
வள்ளால் வருக வருகவே. ௩

போ, பாண்டித்துரைத்தேவர்.

திண்ணவின்பச் சேவடியுந் திருவிழியுந்
 திருமார்புஞ் செல்வக் கையும்
நண்ணுமன்பர்க் கருள்கருணைத் திருமுகமும்
 பசுங்குழவி நடையே யாகிப்
புண்ணியத்தின் பொலிவாகி அற்புதக்கோ
 லக்கொழுந்தாய்ப் புலனா யேற்குக்
கண்ணைவிட்டு நீங்காத சிவஞான
 சற்குருவே கருணை வாழ்வே. ௫

மெய்கண்ட நாதன் விரைகழல் வெல்க.

சிவஞான மாதவன் சேவடி வாழ்க.

வாழ்த்து.

வான்முகில் வழாது பெய்க
 மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
 குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
 நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
 விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

காஞ்சிபுரம்

மெய்கண்டார் கழக வெளியீடுகள்

1	திருமுறை சாத்திரங்கள்	
2	தலைமை உரையின் மேல்குறிப்பு	
3	திருஞானசம்பந்தர் திருநாட்சிறப்பு	
4	காஞ்சிப்புராணம்	2—8—0
5	திருத்தொண்டர் திருநட்சத்திரப்படம்	
6	ஆண்டுவிழாத் தலைமைப்பேருரை	
7	திருவேகம்பநாதர் திருக்கோயில் திருப்பணியாளர் உருவப்படம்	0—0—6
8	திருக்குரங்கணின்முட்டத்தேவாரம்	
9	திருவோத்தூர்த் தேவாரம்	
10	திருமாகறல் தேவாரம்	0—0—3
11	திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை	0—0—3
12	சைவசந்தாசாரியர் புராணமும் சிவஞானசுவாமிகள் சரித்திரமும்	0—2—0
13	திருப்பனங்காட்டுத் தேவாரம்	0—0—3
14	பாராயணத் திருமுறைத்திரட்டு	0—2—0
15	திருநெறிக் காரைக்காட்டுத் தேவாரம்	0—0—3
16	சிவஞான போதம்	0—2—0
17	கச்சி யேகம்பர் மாலை	
18	திருமேற்றளித் தேவாரம்	0—0—3

பத்மா பிரஸ், காஞ்சிபுரம்.